# ஆயர் மாமன்றப் பாடல்

பாடல் : அருட்பணி. வின்சென்ட் சின்னதுரை		பாடியவர்கள்: திப்பு & சான்ரா

பண் : அருட்பணி. H. ஜோ பாலா		இசைத் தொகுப்பு: X. பால்ராஜ்

கூட்டொருங்கியக்கத் திரு அவை காண
கட்டியம் கூறும் மக்களின் பயணம்
மாற்றத்தை நோக்கி மாறிடும் உலகில்
ஆற்றலாம் ஆவியின் வழிநடப்போம்

I

கனவுத் திரு அவை நம்மில்
ஆற்றலாம் ஆவியின் துணை கேட்போம் - மனக்
காயங்கள் ஆறிட
அன்பில் நிலைத்திட
ஒன்றிணைவோம், பங்கேற்போம்,நற்செய்தி அறிவிப்போம்

II

ஒருவருக்கொருவர் செவிகொடுப்போம்
ஒலிக்கும் ஆவியின் குரல் கேட்போம்
விளிம்பு நிலையில் வாடும் மாந்தர்
துளிர்க்கும் உறவுகள் வளர்த்தெடுப்போம்
பங்கேற்கும் திரு அவை படைத்திடுவோம்
இணைந்தே நடப்போம் (2)

III

எங்கள் திரு அவை இது என்போம்
தோழமையில் நாம் ஒன்றிணைவோம்
தேர்ந்து தெளிந்து நாளும் மகிழ்ந்து வாழ
ஒன்றிணைவோம், பங்கேற்போம்,நற்செய்தி அறிவிப்போம்.